வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

நாள் 07.10.2024 திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மாலத்தீவில் எந்தப் பிரச்சனை ஏற்பட்டாலும் முதலில் உதவிக்கரம் நீட்டும் நாடாக இந்தியா திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- நாட்டில் மத்திய-மாநில அரசுகளின் கூடுதல் ஒத்துழைப்பு மூலம், நக்சல்வாதம் முற்றிலும் ஒழிக்கப்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.
- சென்னையில் நேற்று விமானப்படை வான் சாகச நிகழ்ச்சியின் போது உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு, தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தலா 5 லட்சம் ரூபாய் கருணைத் தொகை அறிவித்துள்ளார்.
- புதுச்சேரியில், கூட்டுறவு துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள, பெட்ரோல்-டீசல் சில்லரை விற்பனை நிலையத்தை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று திறந்து வைத்தார்.

<u>மோடி - மாலத்தீவு (18 )</u>

மாலத்தீவில் எந்தப் பிரச்சனை ஏற்பட்டாலும் முதலில் உதவிக்கரம் நீட்டும் நாடாக இந்தியா திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் மாலத்தீவு அதிபர் டாக்டர் முகமது மூயிஸ்சு-வுடன், பிரதிநிதிகள் நிலையில் பேச்சுவார்த்தை நடத்திய பிரதமர், பின்னர், கூட்டு செய்தியாளர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் இவ்வாறு கூறினார். மாலத்தீவுகளின் அண்டை நாடு என்ற முறையில் இந்திய தன்

பொறுப்புக்களை எப்போதுமே நிறைவேற்றி வந்திருப்பதாகவும், இயற்கை பேரிடர் சம்பவங்களின் போது மாலத்தீவு மக்களுக்குத் தேவையான குடிநீர், உணவு மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்களை இந்தியா வழங்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். கொரோனா காலத்தில் இந்தியாவில் இருந்து தடுப்பூசிகள் மாலத்தீவுகளுக்கு வழங்கப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார். இந்தியாவுக்கும் மாலத்தீவுகளுக்கும் இடையிலான உறவுகள், பல நூற்றாண்டுப் பழமையானவை என்றும், மாலத்தீவுகளின் நெருங்கிய அண்டை நாடாகவும், நெருங்கிய நண்பனாகவும், இந்தியா திகழ்வதாகவும் பிரதமர் கூறினார். அண்டை நாடுகளுக்கு முதலிடம் அளிப்பதான இந்தியாவின் கொள்கையிலும், கடல்சார் மேம்பாடு தொடர்பான இந்தியாவின் சாகர் தொலைநோக்குப் பார்வையிலும், மாலத்தீவுகளுக்கு முக்கிய இடம் இருப்பதாக தெரிவித்தார்.

மோடி -மாலத் தீவு -2 (15 )

இந்தியாவுக்கும் மாலத்தீவுகளுக்கும் இடையிலான, ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பயணத்தின் வெற்றி குறித்து தாங்கள் விரிவான விவாதங்கள் மேற்கொண்டதாக மாலத்தீவு அதிபர் தெரிவித்தார். இருநாடுகளுக்கும் இடையே எதிர்கால ஒத்துழைப்பிற்கான பாதையை வகுப்பது குறித்தும், விவாதங்கள் இடம்பெற்றதாக அவர் கூறினார். இது குறித்து விரிவான தொலைநோக்கு ஆவணம் ஒன்றையும் இருநாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மாலத்தீவுகளில் உள்ள ஹனிமாதூ சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதையை பிரதமர் திரு. நரேந்திர மோடி மெய்நிகர் முறையில் திறந்து வைத்தார். மாலத்தீவுகளின் ரூபே அட்டையின் பயன்பாட்டை இருதலைவர்களும் தொடக்கி வைத்து, ரூபே அட்டை மூலமான முதலாவது பணப் பரிவர்த்தனையை பார்வையிட்டனர்.

ஊழல் ஒழிப்பு, நீதித்துறை மேம்பாடு, இளைஞர் நலன், மற்றும் விளையாட்டு உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகி உள்ளன.

## மோடி - நவராத்திரி (7 )

நவராத்திரி பண்டிகையின் 5ஆம் நாளான இன்று பிரதமர் திரு.நரேந்திர மோடி. ஸ்கந்தமாதா தேவிக்கு பிரார்த்தனை செலுத்தியுள்ளார். சுகத்தையும் மோட்சத்தையும் வழங்கக்கூடிய ஸ்கந்தமாதா, அனைவர் மீதும் அருளாசி பொழியட்டும் என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார். குஜராத் மக்களின் கர்பா நாட்டுப்புற நடனத்திற்கான ஆவதி கலாயா - மதி வாயா கலாயா என்னும் பாடல் ஒன்றையும் பிரதமர் சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார்.

## ஷா – மோடி (17 )

பொது வாழ்வில் 23 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு.நரேந்திர மோடிக்கு, மத்திய உள்துறை அமைச்சர் திரு, அமித் ஷா வாழ்த்து தெரிவித்துள்ளார். பிரதமர் திரு. நரேந்திர மோடியின் நெடிய பயணம், பொதுவாழ்வில் உள்ள அனைவருக்கும், ஜீவனுள்ள எடுத்துக்காட்டாகத் திகழ்வதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் திரு.அமித்ஷா கூறியுள்ளார். தனிப்பட்ட நபர் ஒருவர், தன் வாழ்க்கை முழுவதையும், நாட்டின் நலன் மற்றும் மக்களின் நல்வாழ்விற்கு எப்படியெல்லாம் அர்ப்பணித்துக் கொள்ள முடியும் என்பதன் சின்னமாகவே, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் நீண்ட பொது சேவைப் பயணம் அமைந்து இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். ஏழைகளின் நல்வாழ்வு, நாட்டின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்கான பணிகளில் ஈடுபடும் அதே வேளை, உலக அளவில் நாட்டின் அடையாளத்தையும் வலுப்படுத்துவது எப்படி என்பதை, பிரதமர் திரு. நரேந்திர மோடி செய்து காட்டி இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

பிரச்சனைகளை தனித்தனியே பார்ப்பதற்குப் பதிலாக, ஒட்டுமொத்தத் தீர்வுக்கான முழுமையான பார்வை ஒன்றை, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டிற்கு வழங்கி இருப்பதாகவும் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

## அமித்ஷா நக்சல் - (12 )

நாட்டில் மத்திய மாநில் அரசுகளின் கூடுதல் ஒத்துழைப்பு மூலம், நக்சல்வாதம் முற்றிலும் ஒழிக்கப்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். நக்சல் வாதத்தால் பாதிக்கப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்களுடன் இன்று புதுடெல்லியில் ஆய்வுக்கூட்டம் நடத்திய அவர், நக்சல் வன்முறை சம்பவங்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 700-லிருந்து தற்போது சுமார் 7 ஆயிரத்து 700 ஆகவும், சிவிலியன்கள் மற்றும் பாதுகாப்பு படையினரின் உயிரிழப்பு 70 சதவிகித அளவிற்கும் குறைந்து இருப்பதாக தெரிவித்தார். நக்சல்வாதம், நாட்டின் வளர்ச்சிப் பாதையில் மிகப்பெரிய தடைக்கல் என்றும், நக்சல் வாதத்தால் யாருக்கும் எந்தப் பயனும் இருக்கப் போவதில்லை என்றும் உள்துறை அமைச்சர் கூறினார். நக்சல் வாதத்துடன் சம்பந்தப்பட்ட இளைஞர்கள், ஆயுதங்களைக் கைவிட்டு நாட்டின் பிரதான நீரோட்டத்துடன் தங்களை இணைத்துக்கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

## வாக்கு எண்ணிக்கை (10 )

ஜம்மு-காஷ்மீரில் மொத்தமுள்ள 90 தொகுதிகளுக்கு 3 கட்டங்களாகவும், ஹரியானாவில் மொத்தமுள்ள 90 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாகவும் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள், நாளை எண்ணப்பட உள்ளன. ஹரியானாவில் 90 மையங்களிலும், ஜம்மு-காஷ்மீரில் 20 மையங்களிலும் வாக்கு எண்ணிக்கை மேற்கொள்ளப்படும். அனைத்து வாக்குப்பதிவு மையங்களிலும், பாதுகாப்பு உள்ளிட்ட

அனைத்து ஏற்பாடுகளும் செய்து முடிக்கப் பட்டுள்ளன. ஜம்மு-காஷ்மீரில் 873 வேட்பாளர்கள் மற்றும் ஹரியானாவில் ஆயிரத்து 31 வேட்பாளர்களின் அரசியல் எதிர்காலம், நாளைய வாக்கு எண்ணிக்கையின் போது தீர்மானிக்கப் படும்.

<u>வான் சாகசம் -1 ( 19)</u>

சென்னையில் நேற்று நடைபெற்ற விமானப்படை வான் சாகச நிகழ்ச்சியின் போது உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தலா 5 லட்சம் ரூபாய் கருணைத் தொகை அறிவித்துள்ளார். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார். வான் சாகச நிகழ்ச்சியின் போது எந்த ஒரு சூழலையும் எதிர்கொள்ள அரசு முற்றிலும் தயார் நிலையில் இருந்ததாகவும், விமானப் படைக்கு அரசின் முழு ஒத்துழைப்பு வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வெப்பமான வானிலை மற்றும் சில மருத்துவக் காரணங்களால் உயிரிழப்புகள் ஏற்பட்டதாகவும், இது மிகவும் துரதிருஷ்ட வசமானது என்றும் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். பார்வையாளர்களின் எண்ணிக்கை மிக அதிகம் என்றும், பொது போக்குவரத்து வசதிகளை பெறுவதில் இவர்கள் மிகுந்த சிரமங்களை சந்திக்க நேர்ந்ததாகவும், அவர் தெரிவித்தார். இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுக்க முழு கவனம் செலுத்தப்படும் என்றும் தமிழக முதலமைச்சர் கூறியுள்ளார்.

முன்னதாக, தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில், வான் சாகச நிகழ்ச்சிகளை பார்வையிட வந்தவர்களில் 5 பேர் உயிரிழந்த நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டதாக தெரிவித்தார்.

வான் சாகசம் -2 (12 )

வான் சாகச நிகழ்ச்சி தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு இருந்த ஏற்பாடுகள் குறித்து அமைச்சர் ஊடகங்களுக்கு எடுத்துக் கூறினார். வான் சாகச நிகழ்ச்சிகள் நடைபெற்ற பகுதியில் 40 ஆம்புலன்ஸ் வண்டிகள் நிறுத்தப்பட்டு இருந்ததாகவும், இணை மருத்துவ பணியாளர் குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டு இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, மத்திய தகவல்-ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர். எல். முருகன் நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசுகையில், தமிழகத்தில் உள்ள திமுக அரசு, வான் சாகச நிகழ்ச்சியை சரியாக நடத்துவதில், விமானப் படையுடன் ஒருங்கிணைப்பாக செயல்படவில்லை என்றார். தமிழகத்தில் போதைப் பொருள் நடமாட்டம் அதிகரித்து இருப்பதற்கு திமுக அரசு தான் காரணம் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

ரங்கசாமி ( 8)

புதுச்சேரியில், தட்டாஞ்சாவடி தொழிற்பேட்டையில் உள்ள கூட்டுறவு சங்க அரிசி ஆலை வளாகத்தில், கூட்டுறவு துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள, பாரத் பெட்ரோல்-டீசல் சில்லரை விற்பனை நிலையத்தை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று திறந்து வைத்தார். தமது வாகனத்திற்கு எரிபொருள் நிரப்பி முதலாவது விற்பனையை அவர் தொடக்கி வைத்தார். இவ்விழாவில் புதுச்சேரி அரசின் கூட்டுறவுத்துறை செயலர் திரு. நெடுஞ்செழியன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.யஷ்வந்தையா, மற்றும் இதர அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நூறுநாள் -ஆயுஷ்  (17 )

மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் புதுச்சேரியில் செயல்படும் ஹோமியோபதி மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு, 100 நாள் சாதனைகள் குறித்து செய்தியாளர் கூட்டம் ஒன்றை நடத்தியது. இந்த ஆராய்ச்சி பிரிவில், கடந்த 100 நாட்களில்  பெண்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள், ஹோமியோபதி சிகிச்சை பெற்றுள்ளதாகவும், புதுச்சேரியில் முதல் கட்ட மாதவிடாய் சுகாதாரத் திட்டம் நிறைவேற்றி முடிக்கப் பட்டுள்ளதாகவும், ஹோமியோபதி மருத்துவ ஆராய்ச்சி மையத்தின் பொறுப்பு அதிகாரி டாக்டர் பிரபாத் திவாரி, புதுச்சேரி அரசின் ஆயுஷ் துறை இயக்குநர் டாக்டர் ஸ்ரீதரன் ஆகியோர் தெரிவித்தனர். புதுச்சேரியில் உள்ள பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளுக்கு டெங்கு காய்ச்சலுக்கான ஹோமியோபதி தடுப்பு மருந்து வழங்கப் பட்டதாகவும், ரத்த சோகையைத் தடுப்பதற்கான ஹோமியோபதி மருந்து விநியோகம் செய்யப் பட்டதாகவும் இவர்கள் கூறினர். வைட்டமின்-டி குறைபாட்டின் பரவலை மதிப்பிட்டு, ஹோமியோபதி சிகிச்சை வழங்குவதற்கான பொது சுகாதாரத் திட்டமும், சிறுநீரக கல் பற்றிய ஆராய்ச்சி திட்டமும்  விரைவில் தொடக்கப்படும் என ஹோமியோபதி மருத்துவ ஆராய்ச்சி பிரிவு தெரிவித்துள்ளது.

சிவராஜ் (10)

நாட்டில் வேளாண் கலாச்சாரத்தை மேம்படுத்த அரசு பாடுபட்டு வருவதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகளுடன் கூட்டம் ஒன்றை நடத்திய அவர், பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், விவசாயிகளின் நலனுக்காக, வேளாண் வளர்ச்சித் திட்டம், பயிர்க் காப்பீட்டுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு அமல்படுத்தி வருவதாக தெரிவித்தார். பாரதீய கிசான் யூனியன் தலைவர் திரு. சதீஷ் லம்பர்தார் ஆகாசவாணி செய்தியாளரிடம் பேசுகையில்,  விவசாயிகளின் எல்லா பிரச்சனைகளையும் அமைச்சர்

விரிவான முறையில் கேட்டறிந்து, தீர்வுகளுக்கு உறுதி அளித்ததாக தெரிவித்தார்.

<u>உணவுப் பதனீடு (18 )</u>

நாட்டில் உணவுப் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்த, வரவிருக்கும் நாட்களில் 100 இடங்களில் உணவு பரிசோதனைக் கூடங்கள் நிறுவப்படும் என மத்திய உணவு பதப்படுத்தும் துறை அமைச்சர் திரு.சீராக் பாஸ்வான் தெரிவித்துள்ளார். சில்லரை வணிகர்கள், அன்றாட பயன்பாட்டுப் பொருட்களின் விற்பனையாளர்கள், மற்றும் இ.வர்த்தக நிறுவனங்களின் பங்கேற்புடன், ஃபிக்கி தொழில்-வணிகக் கூட்டமைப்பு சார்பில், புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, வருடாந்திர MASSMERIZE மாநாட்டில் உரையாற்றிய அவர், உணவு பதனீட்டுப் பணிகளின்போது, கழிவுகளைக் குறைத்து, மதிப்புக் கூடுதலை அதிகரிக்கும் வகையில், 50 கதிர்வீச்சுப் பிரிவுகள் அமைக்கப்படும் என்றார். உலகின் உணவுக் கூடையாக இந்தியாவை மேம்படுத்த, உணவுப் பதப்படுத்தும் தொழில்துறையினர் மற்றும், சம்பந்தப்பட்ட இதர பிரிவினர், அரசுக்கு உதவவேண்டும் என அமைச்சர் கேட்டுக்கொண்டார். உணவின் தரம் பற்றிய இந்தியாவின் தர நிலைகள், எதிர்காலத்தில் உலக அளவில் அங்கீகாரம் பெற வேண்டும் என்றும், இந்திய உணவுகளின் பன்முகத் தன்மையை தொழில்துறையினர் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

<u>நோபல் பரிசு (9)</u>

மருத்துவத் துறையில் 2024ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசு, microRNA என்னும் நுண்ணிலை மரபணுவையும், அதன் பயன்பாடுகளையும், கண்டறிந்ததற்காக Victor Ambrose, Gary Ruvkun ஆகிய இரண்டு அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. இவர்களின் இந்த

கண்டுபிடிப்பு, உடல் உறுப்புகள் எப்படி உருவாகி செயல்படுகின்றன என்பதை புரிந்து கொள்வதில், முக்கிய அடிப்படையாக அமைந்து இருப்பதாக, நோபல் பரிசுக் குழு அறிவித்துள்ளது. நடப்பு ஆண்டில், இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு, நாளையும், வேதியியல் துறைக்கான நோபல் பரிசு, நாளை மறுநாளும் அறிவிக்கப்படும்.